

மாங்காடு நகர தி.மு.க. சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் நகரக் கழகச் செயலாளர் நகர மன்ற துணைத் தலைவர் பட்டூர் எஸ்.ஜபருல்லா தலைமையில் நடைபெற்றது. இதில் இளம் பேச்சாளர் வி.பாலமுருகன், கழக பேச்சாளர் ராமையா சிறப்புரையாற்றினார். உடன் காஞ்சி மாவட்ட ஊராட்சி குழு தலைவரும் ஒன்றிய கழக செயலாளருமான படப்பை ஆ.மனோகர், தொகுதி தேர்தல் பார்வையாளர் பாஸ்கர் சுந்தரம், பொதுக்குழு உறுப்பினர் எம்.ஆர்.சீனிவாசன், நகர நிர்வாகிகள் எம்.மகேந்திரன், ஜி.எம்.வில்லியம்ஸ், கே.ஜி.சங்கர், ஆர்.சுசீலா, மாவட்ட பிரதிநிதிகள் ஜி.ராமு, ஆர்.பாஸ்கரன், ஆர்.சாரதி, எம்.வல்லரா, டி.பெருமாள் ராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி (17.5.2025) அன்று மண்டலம்–5. வார்டுகள் 55 & 57, தங்கசாலை தெரு. தாதா முத்தையப்பன் தெரு, பிரகாசம் சாலை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்கள் வீதி வீதியாக சென்று. நடைபயணம் மேற்கொண்டு, பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாநகராட்சி அலுவலர்கள் மற்றும் கழக நிர்வாகிகளுடன் பொதுமக்களை நேரடியாக சந்தித்து, அவர்களின் தேவைகளை கண்டறிந்து குறைகளை தீர்க்கும் விதமாக, அப்பகுதியில் பழுதடைந்துள்ள மின்சார பில்லர் பாக்ஸை உடனடியாக சரி செய்து, நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். இந்த ஆய்வின் போது மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையாளர் கட்டா ரவி தேஜா, மண்டலக் குழுத்தலைவர் பி.ஸ்ரீராமுலு. பகுதி செயலாளர் எஸ்.முரளி, மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஷ் ஜெயின் நவீன் தாஹா, மாநகராட்சி மண்டல அலுவலர் டாக்டர் பரிதா பானு. செயற்பொறியாளர்கள் (மாநகராட்சி) லோகேஷ்வர். (மின்சாரத்துறை) ஜெயச்சந்திரன். பகுதி துணை செயலாளர் அபரஞ்சி. உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் மின்சாரத்துறை. காவல்துறை, குடிநீர் வடிகால் வாரியம், மாநகராட்சி அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் அமுதகரம் - 88வது நாள்!

## கொளத்தூர் கிழக்குப் பகுதியில் ஐ.சி.எப்.வ.முரளிதரன் – எ.நாகராசன் –கே.சந்துரு வழங்கினர்

சென்னை, மே 19 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 88வது நாள் கொளத்தூர் கிழக்கு பகுதி அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு உணவு வழங்கினார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 88 ஆம் நாளான கழகத்தலைவர்தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (18.5.2025) கொளத்தூர் கிழக்கு பகுதி: 1) வட்டம் 68 அ கே.சி கார்டன் ஐந்தாவது தெரு, சென்னை.2) வட்டம் 66 அ பாஷ்யம் தெரு, வெற்றி நகர், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு அவர்கள் வழிகாட்டுதல்படி, ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில் ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம், துரைகண்ணன், ம.அசோக்குமார், ஆர்.எஸ்.சித்திக், எஸ்.தனசேகர், கே.சாரதா, டி.யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி.ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி. ஊமைத்துரை, கே.பி. ஆதவன்மணி, என்.பொன்முடி, கே.ஜார்ஜ்குமார், பி.டி.சி.எஸ்.ரவி, பா.அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என்.பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி.அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ்.முரளி, ஆர்.ராஜன், கே.ஆர்.அபரஞ்சி, அசோக் ஜெயின், பி.விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், அன்பரசன், ஆதவன் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமையில் - காஞ்சிபுரம்

# தெற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி பொறுப்பாளர்கள் அறிமுகக் கூட்டம்!

## வே.கௌதமன் – க.செல்வம் எம்.பி. – சி.வி.எம்.பி.எழிலரசன் பங்கேற்பு! சி.ராதாகிருஷ்ணன் வரவேற்பு!

காஞ்சிபுரம், மே 19 -

காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.கழக விளையாட்டு மேம்பாட்டு அணி புதிய பொறுப்பாளர்கள் அறிமுகக் கூட்டம் நாளை (20.05.2025 செவ்வாய்கிழமை) காலை 10.30 மணிக்கு காஞ்சிபுரம். மேட்டுத்தெரு. ஏ.கே.ஜி. திருமண மகாலில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் க. சுந்தர் எம்.எல்.எ. தலைமையேற்று ஆலோசனை வழங்கி சிறப்புரையாற்றுகிறார். விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட அமைப்பாளர் சி.ராதாகிருஷ்ணன் வரவேற்கிறார்.

விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் சி.நவீன் சிவாஜி, மா. வினோத்குமார், ஏ.தினேஷ், அ.ஷாகுல் ஹமீது, ஜெ.ஆர். சதிஷ்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணை செயலாளர் வே.கௌதமன், மாவட்ட துணை செயலாளர் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் சி.வி.எம்.பி. எழிலரசன் எம்.எல்.ஏ., ஆகியோர் ஆலோசனை வழங்குகின்றனர்.

மேலும் மாநகரச் செயலாளர் சி.கே.வி.தமிழ்செல்வன், சர்பிராண்டு கே.ஆறுமுகம், மேயர் எம். மகாலட்சுமி யுவராஜ், ப. அப்துல்மாலிக், ஜி.சுகுமாரன், தி.அன்பழ கன், பெ. சுந்தரவரதன், வி.எஸ்.ராமகிருஷ்ணன், எம்.எஸ்.சுகுமார், .ஆர்.நாராயணன், டாக்டர் ஆர்.டி.அரசு, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.கே.பி. சீனிவாசன், எஸ்.சிகாமணி. வே.ஏழுமலை, கே.ராஜேந்திரன், எஸ்.டி.பிரேம்சந்த், எஸ்.உசேன், பி.சசிகுமார், எஸ்.எழிலரசி சுந்தரமூர்த்தி,

ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்:- கு. குமார், பி.எம்.குமார், பி. எம்.பாபு, பி.சேகர், கெ. ஞானசேகரன், டி.குமார், க.குமணன், ஏ.சரவணன், பி.எச்.சத்தியசாய், ஜி.தம்பு, கே.கண்ணன், பொன்.சிவக்குமார், ஏ.சிற்றரசு, எம்.எஸ். பாபு, வி.ஏழுமலை, கே.எஸ்.இராமச்சந்திரன், கே.திலகர், எஸ்.சந்துரு, அ.தசரதன், சு.வெங்கடேசன், என்.பாண்டியன், டி. மோகன்தாஸ், ஆ.சுந்தரமூர்த்தி, எழிலரசன், பாரிவள்ளல்,

அமைப்பாளர்கள் ஜா.ஷொயேப் கான், ரா. நிதீஷ்குமார், தி. கிருஷ்ணமூர்த்தி, த.ஐயப்பன், அ.ஜெகநாதன், எஸ்.சசிகுமார், ஜெ.அரவிந்தன், வீ.பாலாஜி, ரா. தினேஷ்குமார், சு.பிரதாப், செ.பிரகாஷ், கா.பாஸ்கர், செ.சிலம்பரசன், ஜானகிராமன், க.வெற்றிச்செல்வன், பூ.சரண்குமார், த.செல்வகுமார், ச.பூவர சன், ர.விஜயகுமார், ச.மனோஜ்குமார், ச.ஸ்ரீதர், சி.சக்திவேல் உள்ளிட்ட துணை அமைப்பாளர்கள் கலந்துகொள்கின்றனர்.

மாநகர அமைப்பாளர் டி.இ.சரண்ராஜ் நன்றி கூறுகிறார்.



திருவள்ளூர் கிழக்கு மாவட்ட திமுக சார்பில் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் மு.பகலவன் தலைமையில் நடைபெற்றது இதில் மாவட்ட கழகப் பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ் கலந்து கொண்டு பாகமுகவர்கள் கூட்டம் நடத்துவது குறித்து ஆலோசனை வழங்கினார். உடன் தொகுதி பார்வையாளர்கள் தமிழ் க.அமுதரசன், அழகிரி சதாசிவம், மாநில மாவட்ட நிர்வாகிகள் ஜெ.மூர்த்தி, சி.எச்.சேகர், மு.கதிரவன், கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எஸ்.ரமேஷ், சுப்பிரமணியம், பா.செ.குணசேகரன், பரிமாள விஸ்வநாதன், டி.கே.சந்திரசேகர், கி.வே.ஆனந்த் குமார், மு.மணிபாலன், ஆ.சத்தியவேலு, நா. செல்வசேகரன், நா.பரிமளம், ஜான்பொன்னுசாமி, மு.முரளிதரன், ஜெகதீசன், இரா.அறிவழகன், ஜி.ரவிக்குமார், பி.முத்து, க.சு.தமிழ் உதயன், உள்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்கள்

### செலுத்திய தொகை அனைவருக்கும் கிடைக்க நடவடிக்கை!

# கலைமகள் சபா உறுப்பினர்கள் இணையத்தில் பதிவு செய்ய வேண்டும்!

## தமிழ்நாடு அரசு செய்தி வெளியீடு!

சென்னை, மே.18-

கலைமகள் சபா தமிழ்நாடு சங்கங்கள் பதிவு சட்டம் 1975ன் கீழ் நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம், புது பள்ளிபாளையம் தெரு என்ற இடத்தில் 16/1984 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி சங்கத்தில் சுமார் 6,50,000 உறுப்பினர்கள் சந்தாதாரர்களாக பதிவு செய்து உள்ளனர்.

கலைமகள் சபா உறுப்பினர்கள் பாதுகாப்பு சங்கம் (பதிவு எண்.008/2003) என்ற சங்கத்தினர்களால் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு W.P.No.43650/2006ல் 01.11.2021 தேதிய தீர்ப்பாணையில் சங்க உறுப்பினர்களுக்கு அவர்கள் முதலீடு செய்த தொகை வழங்கிட உரிய நடவடிக்கை எடுத்திட ஆணையிடப்பட்டது. மேற்படி தீர்ப்பிற்கிணங்க 20.06.2024 முதல் பதிவுத்துறை தலைவர் அவர்கள் இச்சங்கத்தின் தனி அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

பதிவுத்துறை தலைவர் தனி அலுவலராக நியமனம் செய்த பிறகு சங்கத்தின் செயல்பாடுகளை துரிதப்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக கலைமகள் சபா சங்கத்தின் மூலமாக வாங்கப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் கணினிமயமாக்கப்பட்டு அந்த சொத்துக்களின் ஆவணங்கள் அனைத்தும் ஒளிவருடல் (Scan) செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டுள்ளன. மேலும் சங்கத்தின் சார்பாக வாங்கப்பட்ட சொத்துக்களில் இதுவரை பட்டா மாறுதல் செய்யாமல் இருந்த இனங்களுக்கு பட்டா மாறுதல் உத்தரவுகள் பெற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு கலைமகள் சபா பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டு வருகிறது. மேலும் அனைத்து கலைமகள் சபா உறுப்பினர்களின் பெயர்கள், உறுப்பினர் எண், அவர்கள் செலுத்திய சந்தா தொகை உள்ளிட்ட அனைத்து விவரங்களும் கணினி மயமாக்கப்பட்டுள்ளன. ஏறத்தாழ 6,50,000 உறுப்பினர்களுடைய விவரங்கள் கணினி மயமாக்கப்பட்டு அதற்காக தனியாக ஒரு மென்பொருள் தயாரிக்கப்பட்டுள்ளது.

கலைமகள் சபா உறுப்பினர்கள் அனைவரும் அவர்கள் செலுத்திய சந்தா தொகை திரும்ப பெரும் வகையில் அவர்கள் (https://kalaimagalsabha.in) என்ற இணையதளத்தில் உள்ளீடு செய்து பதிவு செய்து கொள்ளலாம். அவர்கள் பதிவு செய்தவுடன் அதை உறுதி செய்யும் விதமாக ஒரு குறுஞ்செய்தி (SMS) பெறப்படும். மேலும் அவர்களுடைய வங்கி கணக்கினை மென்பொருளில் பதிவேற்றம் செய்ய வேண்டும். அந்த தகவல்கள் அனைத்தும் கலைமகள் சபா அலுவலகத்தில் பராமரிக்கப்படுகின்ற பதிவேடுகளுடன் ஒப்பிட்டு பார்த்து தகவல்கள் சரிபார்க்கப்பட்டு செலுத்திய தொகை வங்கி கணக்கில் நேரடியாக வழங்கப்படும்.

இதற்கென்று தனியாக ஒரு மென்பொருள் உருவாக்கப்பட்டு தயார் நிலையில் உள்ளது. கலைமகள் சபா உறுப்பினராக பதிவு செய்து அவர்கள் செலுத்திய தொகையை எதிர்பார்க்கும் அனைவருக்கும் அவர்கள் செலுத்திய தொகை முழுவதும் திருப்பி வழங்கிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இந்த நடவடிக்கைகள் அனைத்தும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தால் கண்காணிக்கப்பட்டு வருகிறது. மேலும் கலைமகள் சபாவினால் வாங்கிய சொத்துக்கள் அனைத்தும் அரசு இணையதளம் (https://tntenders.gov.in) மூலம் ஏலம் விடுவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பான பணிகளும் தனியாக நடைபெற்று வருகின்றன. இந்த பணிகளையும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் கண்காணித்து வருகின்றது.

எனவே கலைமகள் சபா உறுப்பினர்கள் அனைவரும் (https://kalaimagalsabha.in) என்ற இணையதளத்தில் பதிவு செய்து அவர்கள் செலுத்திய பணம் அனைத்தையும் திரும்ப பெறுவதற்கு தமிழ்நாடு அரசு பத்திர பதிவுத்துறை தலைவர் மற்றும் தனி அலுவலர் கலைமகள் சபா தினேஷ் பொன்ராஜ் ஆலிவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

### மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் தலைமையில்

# ஆர்.கே.நகர் - பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட மாமன்ற உறுப்பினர்கள் மாதாந்திர கூட்டம்!

## முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்!

சென்னை, மே 19-

சென்னை மாநகராட்சி நான்காவது மண்டலத்திற்கு உட்பட்ட ஆர்.கே. நகர், பெரம்பூர், ஆகிய சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 15 மாமன்ற உறுப்பினர்களுக்கான மாதாந்திர கூட்டம் தண்டையார்பேட்டை திருவெற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்திற்கு மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் தலைமை வகித்தார். பொறுப்பு மண்டல அதிகாரி திருநாவுக்கரசு முன்னிலை வகித்தார்.

இதில் தி.மு.க., காங்கிரஸ், ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட், உள்ளிட்ட கட்சியை சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்கள் வார்டுகளில் நடைபெறும் பணிகள் குறித்தும் செயல்படுத்த வேண்டிய பணிகள் குறித்து பேசினர். அதற்கு மண்டலக் குழுத் தலைவர் அதை செயல்படுத்திட அதிகாரிகளுக்கு உத்தரவு விட்டார்.

மேலும் இந்த கூட்டத்தில் 47 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் முக்கிய தீர்மானமாக ரூ.2 கோடியில் வியாசர்பாடி கணேசபுரம் பிரதான சாலையில் சமுதாய கூடம் கட்டுவது, பெரம்பூர் காமராஜர் நகரில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மைய கட்டிடம் மற்றும் பூங்கா ரூ.1கோடியே 30லட்சம் மதிப்பீட்டில் கட்டுவது வியாசர்பாடி சாஸ்திரி நகர் பகுதியில் உள்ள தெருக்களில் பூங்கா 1 கோடியே 78 லட்சம் ரூபாய் மதிப்பிட்டில் பணிகள் செயல்படுத்துவது தண்டையார்பேட்டை நேதாஜி நகரில் சாலையில் 10 லட்சம் மதிப்பீட்டில் ரப்பர் வேகத்தடை அமைப்பது, காசிமேட்டில் 17லட்சம் மதிப்பீட்டில் பள்ளி பழுதுபார்த்தல் மற்றும் மேம்படுத்துதால் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தற்போது கோடை வெயில் தொடங்கி உள்ளதால் மக்களுக்கு தட்டுப்பாடு இன்றி குடிநீர் கிடைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள குடிநீர் வாரிய அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த கூட்டத்தில் மாநகராட்சி பகுதி செயற்பொறியாளர், குடிநீர் வாரிய பகுதி செயற்பொறியாளர், மின் வாரிய அதிகாரிகள், வருவாய்த்துறை அதிகாரிகள், மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



சென்னை மாநகராட்சி நான்காவது மண்டலத்திற்கு உட்பட்ட ஆர்.கே.நகர், பெரம்பூர், ஆகிய சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள 15 மாமன்ற உறுப்பினர்களுக்கான மாதாந்திர கூட்டம் தண்டையார்பேட்டை திருவெற்றியூர் நெடுஞ்சாலையில் உள்ள மாநகராட்சி மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு.கணேசன் தலைமை வகித்தார். பொறுப்பு மண்டல அதிகாரி திருநாவுக்கரசு முன்னிலை வகித்தார். இதில் தி.மு.க., காங்கிரஸ், ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், கம்யூனிஸ்ட், உள்ளிட்ட கட்சியை சேர்ந்த மாமன்ற உறுப்பினர்கள் கலந்து கொண்டு தங்கள் வார்டுகளில் நடைபெறும் பணிகள் குறித்தும் செயல்படுத்த வேண்டிய பணிகள் குறித்து பேசினர். அதற்கு மண்டலக் குழுத் தலைவர் அதை செயல்படுத்திட அதிகாரிகளுக்கு உத்தரவு விட்டார்.